# தூத்துக்குடி கிரேஸ் கல்லூரியில் தொழில் தொடக்க மையம் திறப்பு



**தூத்துக்குடி, மார்ச் 6:** தூத்துக்குடி முள்ளக்காட்டில் உள்ள கிரேஸ் பொறியியல் கல்லூரியில், மாணவர்களுக்கு தொழில்முனைப்பு வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் நவீனத்துவம்-தொழில் தொடக்க மையம் திறப்பு விழா நடைபெற்றது (படம்).

சென்னையில் உள்ள தமிழ்நாடு முன்னோடி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம் சார்பாக இம்மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல்லூரித் தலைவர் சி.எம். ஜாஷ்வா தலைமை வகித்தார். டிஏடிடிஐ நிறுவன இயக்குநர் சுந்தரேசன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று மையத்தைத் திறந்துவைத்தார்.

இம்மையம் மூலம் ஐஓடி, ஏஐ, சோலார் டெக்னாலஜி, மின்சார வாகனம் போன்ற துறைகளில் மாணவர்கள் புதுமையான தொழில் வாய்ப்பு உருவாக்கலாம். ஸ்டார்ட் அப் இந்தியா, மேக் இன் இந்தியா திட்டங்களின்கீழ் தொழில் தொடங்க ஆராய்ச்சி உதவிகள் வழங்கப்படும். தொழில்முனைவோருக்கு வழிகாட்டுதல், நிதி ஆதரவு, தொழில் வளர்ச்சிக்கான பயிற்சிகள் வழங்கப்படும். மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளை தொழில் முனைப்பு வாய்ப்புகளாக மாற்ற இம்மையம் உதவும்.

விழாவில், கல்லூரி முதல்வர் எஸ். ரிச்சர்ட், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்- மாணவியர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை நிர்வாக அலுவலர் தினகரன் செய்திருந்தார்.